பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 61 நாள்: 07.05.2018

**சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.33.80 கோடி மதிப்பீட்டில் தியாகராய சாலையில் நடைபாதை வளாகம் அமைக்கும் பணியினை நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்.**

சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் **ரூ.33.80 கோடி மதிப்பீட்டில்** தியாகராய சாலையில் நடைபாதை வளாகம் அமைக்கும் பணியினை நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று (07.05.2018) துவக்கி வைத்தார்.

சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், தியாகராய நகரில் **ரூ.3.44 கோடி மதிப்பீட்டில்** 1,772 தெருவிளக்குகள் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. தியாகராய நகரில் அனைத்து தெருவிளக்குகளும் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டதால், பெருநகர சென்னை மாநகராட்சியின் மின் பயன்பாடு ஒரு வருடத்திற்கு ரூ.95.00 இலட்சம் சேமிக்கப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், சென்னை மாநகர மக்கள், புகார்கள் தெரிவிப்பதை எளிதாக்கும் வகையில் ‘‘நம்ம சென்னை’’ என்ற கைபேசி செயலி ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

தற்பொழுது இத்திட்டத்தின்கீழ் (i) ரூ.6.43 கோடி மதிப்பீட்டில் ஆளில்லா வானூர்தி மூலம் அனைத்து கட்டடங்கள், சாலைகளில் மேற்பரப்பில் அமைந்துள்ள அனைத்து துறைகளின் சேவை பயன்பாட்டுப் பொருட்களை புவிசார் தகவல் அமைப்பு (GIS) உதவியுடன் வரைபடமாக தயாரிக்கும் பணி (ii) ரூ.7.54 கோடி மதிப்பீட்டில் 10 சாலைகளை மறு வடிவமைக்கும் பணி, (iii) ரூ.6.98 கோடி மதிப்பீட்டில் 13 சாலைகளை மறு வடிவமைக்கும் பணி, (iv) ரூ.9.95 கோடி மதிப்பீட்டில் 8 பூங்காக்களை மறு வடிவமைக்கும் பணி, (v) ரூ.0.36 கோடி மதிப்பீட்டில் மிதிவண்டிக்கான பிரத்யேக தடம் அமைக்கும் பணி (vi) ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி 28 பள்ளிகளில் மின்னணு வகுப்பறை அமைக்கும் பணி (Vii) ரூ.36.54 கோடி மதிப்பீட்டில் தியாகராயா சாலை மற்றும் தணிகாச்சலம் சாலை சந்திப்பில் பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் பணி (Viii) ரூ.2.07 கோடி மதிப்பீட்டில் போக்குவரத்து குறியீடுகள் மற்றும் சமிக்ஞைகளை விளக்கும் பூங்கா (ix) ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான உணர்வு பூங்கா மற்றும் (x) ரூ.9.37 கோடி மதிப்பீட்டில் தியாகராயா நகரில் உள்ள மழைநீர் வடிகால்களை இணைக்கும் பணி போன்ற 10 பணிகள் ரூ.82.36 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் 2017–18 அறிவிப்பில் தியாகராய நகரில் உள்ள தியாகராயா சாலையில் நடைபாதை வளாகம் அமைக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில், சீர்மிகு நகரத் திட்டத்தில், பகுதி சார்ந்த வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்ற தியாகராய நகர் தேர்வு செய்யப்பட்டு, அதில் வாகன எரிபொருள் மூலம் வெளியேறும் எரிவாயுவை குறைப்பதற்காக மோட்டார் வாகனமில்லா போக்குவரத்தை ஊக்குவிக்கும் வண்ணமாக தியாகராய சாலையில் நடைபாதை வளாகம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற நிதி சேவை நிறுவனம் மூலம் கலந்தறிதற்குரியவர் நியமனம் செய்து, விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு, விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டது.

நடைபாதை வளாகத்தில் முக்கிய அம்சங்களாக அனைத்து மக்களும் குறிப்பாக மூத்த குடிமக்கள், குழந்தைகள், பாதசாரிகள், மாற்றுத்திறனாளிகளின் சக்கர நாற்காலிகள் எளிதில் செல்லும் வகையிலும், அனைவரும் தங்குதடையின்றி நடப்பதற்கு ஏதுவாக தொடர்ச்சியான நடைபாதை, இதற்கு சேவைத்துறையினரின் மின்இழைப்பெட்டிகள் ஒரே சீராக மாற்றியமைத்தல், சிறுவர் விளையாட்டு பகுதி மற்றும் மேம்படுத்தப்பட்ட கழிப்பிடங்கள், பொதுமக்கள் இளைப்பாறுவதற்கு வசதியான இருக்கைகள், தேவையான இடத்தில் அலங்கார விளக்குகள், கலைநயமிக்க சிலைகள், நீரூற்று மற்றும் பாதசாரிகள் சாலையை கடப்பதற்கு தக்க இடைவெளியில் பாதசாரிகள் வழித்தடம் அமைத்தல் ஆகியவை ஆகும்.

தியாகராய சாலையில் அமையவுள்ள நடைபாதை வளாகம் கட்டுமானப் பணி மேற்கொள்ள ஏதுவாகவும் மற்றும் அத்தருணத்தில் போக்குவரத்தை மாற்றியமைக்க ஏதுவாகவும், பகுதி–1, பகுதி–2 மற்றும் பகுதி–3 என மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. தியாகராய சாலையில், பகுதி 1 – பனகல் பூங்கா முதல் தணிகாசலம் சாலை வரை 730மீ நீளம் கொண்டதாகும். தியாகராய சாலையில், பகுதி 2 – தணிகாசலம் சாலை முதல் போக் சந்திப்பு வரை – 380மீ நீளம் கொண்டதாகும். தியாகராயா சாலை, பகுதி 3 – போக் சந்திப்பு முதல் அண்ணா சாலை வரை 565மீ நீளம் கொண்டதாகும். மேலும், இப்பணியை துரிதமாக மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக இப்பணியானது நான்கு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, ஒப்பம் கோரப்பட்டு, ஒப்பம் முடிவு செய்து, பணி ஆணை வழங்கப்பட்டு இன்று தியாகராய சாலையில் நடைபாதை வளாகம் அமைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது.

தியாகராய சாலையில் நடைபாதை வளாகம் பகுதி–1ல் பேருந்து மற்றும் இருசக்கர வாகனம் மட்டும் செல்லும் வகையில் 7.00மீ அகலமான வாகனப்பாதையும், மத்திய தடுப்பு சுவரும் அமைக்கப்படவுள்ளது. மேலும், இப்பகுதியில் 10.00மீ முதல் 12.00மீ அகலத்தில் நடைபாதை அமைக்கப்படவுள்ளது.

தியாகராய சாலையில் நடைபாதை வளாகம் பகுதி 2 மற்றும் 3ல் அனைத்து வாகனங்கள் செல்லும் வகையில் 15.00மீ அகலமான வாகனப்பாதையும், மத்திய தடுப்பு சுவரும் அமைக்கப்படவுள்ளது. மேலும், இப்பகுதியில் 5.00மீ முதல் 6.00மீ அகலத்தில் நடைபாதை அமைக்கப்படவுள்ளது.

நடைபாதை வளாகப் பகுதியை பயன்படுத்தும் மக்களின் வசதிக்காக தியாகராய சாலை மற்றும் தணிகாசலம் சந்திப்பில் உள்ள இடத்தில் பலஅடுக்கு வாகனம் நிறுத்துமிடம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

தியாகராய நகர் நடைபாதை வளாகம் அமைப்பதன் மூலம் வணிக வளாகங்களில் (mall) உள்ளது போல, வசதிகளான இருக்கைகள், பிரகாசமான தெருவிளக்குகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட கழிப்பிடங்கள் அமையவுள்ளதால் மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் ரம்மியமான சூழ்நிலை பாதுகாப்பான முறையில் எளிதாக பொருட்களை வாங்க இயலும். மேலும், மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்த தேவையான பேட்டரி கார் இயக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்கள், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெ.ஜெயவர்த்தன் அவர்கள், தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சத்திய நாராயணன் அவர்கள், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ் அவர்கள், இ.ஆ.ப., உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**